# தரம் - 12

# தமிழ்

## தேர்ச்சி 2.0



## பெரியாரைத் துணைக்கோடல்

## திருக்குறள்-அரசியல்

Mr.J.Ranjithkumar
Bt/Bt/Eravur Tamil M.V,Batticaloa.

# பெரியாரைத் துணைக்கோடல்






**1) இடைவெளியில் வரவேண்டிய பொருத்தமான சொற்களைக்கொண்டு குறட்பாக்களை பூரணப்படுத்துக ?**

சூழ்ந்து கொளல், அறிவுடையார், தான், உற்றநோய், ஏமரா மன்னன், பெரியாரை, வன்மையுள், ஊதியம், யவர், தொடர்கை

1.1 “அறன் அறிந்து மூத்த ................. கேண்மை
திறன் அறிந்து தேர்ந்து கொளல்”

1.2 “............. நீங்கி உறாஅமை முன்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.”



சூழ்ந்து கொளல், அறிவுடையார், தான், உற்றநோய், ஏமரா மன்னன், பெரியாரை, வன்மையுள், ஊதியம், யவர், தொடர்கை

1.3 “அரியவற்றுள் எல்லாம் அரிதே …………..
பேணித் தமராக் கொளல்.”

1.4 “தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
………….. எல்லாம் தலை”

1.5 “சூழ்வார்கண் ஆக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் ……………………..”

1.6 “தக்கார் சினத்தானாய் ……….. ஒழுக வல்லானை
செற்றார் செயக்கிடந்தது இல்.”



1.7 "இடிக்கும் துணையாரைஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை ..........."

1.8 "இடிப்பாரை இல்லாத ..................
கெடுப்பார் இலானும் கெடும்"

1.9 "முதல் இலார்க்கு ............ இல்லை மதலையாம்
சார்பு இலார்க்கு இல்லை நிலை"

1.10 "பல்லார் பகைகொளலின் பத்து அடுத்த தீமைத்தே
நல்லார் ............. விடல்"



# விடைகள்

1.1 அறிவுடையார்
1.2 உற்றநோய்
1.3 பெரியாரை
1.4 வன்மையுள்
1.5 சூழ்ந்து கொளல்
1.6 தான்
1.7 யவர்
1.8 ஏமரா மன்னன்
1.9 ஊதியம்
1.10 தொடர்கை



2) பொருத்தமான கூற்றினை தெரிவு செய்து அதன் இலக்கத்தினை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

2.1 பெரியாரை துணைக்கோடல் என்பது,

1) தன்னை (அரசன்) வஞ்சிக்கும் பெரியாரை துணையாக கொள்ளுதல்
2) தன்னை (அரசன்) நல்வழிப்படுத்தும் பெரியாரை துணையாகக் கொள்ளுதல்
3) தமது புகழைப்பரப்பும் பெரியாரை துணையாகக் கொள்ளுதல்
4) தமது துன்பத்தை இரசிக்கும் பெரியாரை துணையாக கொள்ளுதல்

(…..)



2.2 பெரியாரை துணைக்கோடலில் பெரியாரது இலக்கணமாகவும் துணைக் கொள்வதன் அவசியமாகவும் அமைவன,

1) அரசன் அறன் அறிந்தவர் நட்பைக் கொள்ள வேண்டும், வந்த துன்பம் நீக்கவும் இனிவராமற் காக்கவும் அது உதவும்
2) அரசன் அரண் அறிந்தவர் நட்பைக் கொள்ள வேண்டும், வந்த துன்பம் நீக்கவும் இனிவராமற் காக்கவும் அது உதவும்
3) அரசன் மறம் அறிந்தவர் நட்பைக் கொள்ள வேண்டும், வந்த இன்பம் நீக்கவும் இனிவராமற் காக்கவும் அது உதவும்
4) அரசன் அகம் அறிந்தவர் நட்பைக் கொள்ள வேண்டும், வந்த இன்பம் நீக்கவும் இனிவராமற் காக்கவும் அது உதவும் (…..)



2.3 பெரியாரை துணைக்கோடலில் பெரியாரை துணைக்கோடலின் சிறப்பாக அமையாதது,

1) பெரியாரை துணைக்கோடல் அரசர்க்குரிய பேறுகள் எல்லாவற்றிலும் அரியது
2) பெரியாரை துணைக்கோடல் அரசர்க்குரிய எல்லா வலிமைகளிலும் சிறந்த வலிமையானது
3) பெரியாரை துணைக்கோடல் அரசர்க்குரிய ஆட்சியில் அவர்களே கண் போன்றவர்
4) பெரியாரை துணைக்கோடல் அரசர்க்குரிய தவறுகள் எல்லாவற்றிலும் பெரியது (…..)



2.4 பெரியாரைத் துணைக்கோடலில் பெரியாரை துணைகோடலின் பயன்களாவன,

1) பெரியாரைத் துணைக் கொண்டோர் பகைவர்கள் இல்லாமலே அழிந்து போவர்
2) பெரியாரைத் துணைக்கொண்டோருக்குப் பகைவர்கள் எந்தத் துன்பத்தையும் செய்யமுடியாது
3) பெரியாரைத் துணைக்கொண்டோர் தற்புகழ்ச்சிக்கு வாடத்தேவையில்லை
4) பெரியாரைத் துணைக்கொண்டோர் பொழுதைக் கழிக்க கலங்கத்தேவையில்லை (…..)



2.5 பெரியாரைத் துணைக்கோடலில் பெரியாரைத் துணைக்கோடாமையின் குற்றங்களாக அமையாதவை,

1) மன்னனைக் கெடுக்கும் பகைவர் இல்லாமல், தானாக அழிந்து போவான்
2) மன்னன் தம்மைத் தாங்குவாரை பெறாவிடின் அதனால் வரும் நிலையில்லாது போவான்
3) பெரியாரைத் துணைக்கொண்டோருக்குப் பகைவர்கள் எந்தத் துன்பத்தையும் செய்யமுடியாது
4) மன்னன் பெரியாரோடு நட்பினை கொள்ளாதொழிந்தால் தான் தனியனாய் பலருடைய பகையைக் கொள்வதைவிடப் பத்துமடங்கு தீமை தரும்

(……)

1)



2.6 “சூழ்வார்கண் ணாக ஒழுகலான்......” , “முதலிலார்க்கு ஊதியம் இல்லை.....” எனத்தொடங்கும் குறள்களில் காணப்படும் அணிகள் முறையே,

1) உவமை, உருவகம்
2) உருவகம் , உவமை
3) உவமை , தற்குறிப்பேற்றம்
4) உருவகம் , தற்குறிப்பேற்றம் (.....)



# விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *2.1* | *2* | *2.2* | *1* | *2.3* | *4* |
| *2.4* | *2* | *2.5* | *3* | *2.6* | *2* |



3) சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.

3.1 அரசன், அறம் அறிந்தவர் நட்பைக் கொள்ள வேண்டும். ( )

3.2 முன் அறிந்து காக்க வல்லத்தன்மையினையுடைய பெரியாரை அரசன் தனக்கு பகையாகக் கொள்ளவேண்டும். ( )

3.3 பெரியாரைத் துணைக்கோடல் அரசருக்குரிய பேறுகள் எல்லாவற்றிலும் அரியது. ( )

3.4 அறிவு முதலானவற்றால் தம்மில் சிறியாரை சிறந்தவராகத் தாம் அறிந்து அவர் வலி நின்று ஒழுகுதல் வேண்டும். ( )



3.5 அரசன் தனக்கு துணையாகக் கொள்ளும் அமைச்சர்களை பாரபட்சத்துடன் துணையாகக் கொள்ள வேண்டும். ( )

3.6 பெரியாரைத் துணைக் கொண்டோருக்கு பகைவர்கள் எந்த துன்பத்தையும் செய்ய முடியாது. ( )

3.7 பெரியார் துணையில்லா அரசன் பகையாய்க் கெடுப்பார் இல்லையாயினும் தானே கெடுவான். ( )

3.8 மன்னன் பெரியோரோடு நட்பினைக்கொள்ளாது ஒழித்தல் தான் தனியனாய் பலருடைய பகையைக் கொள்வதைவிடப் பத்துமடங்கு தீமை தரும் ( )



3.1 சரி
3.2 பிழை
3.3 சரி
3.4 பிழை
3.5 பிழை
3.6 சரி
3.7 சரி
3.8 சரி





# நன்றி



“புத்திதனை தீட்டும் பொக்கிஷமான நூலை
நீ நித்தமும் கற்றால் வித்தகனாவாய்

றஞ்சித்.ஜீ (களப்பூர் அமரன்)